


**28. 09. 2025**

தலைப்பு செய்திகள்

1. உள்நாட்டு பொருட்களை வாங்குவதன் மூலம் தன்னிறைவு பெற்ற இந்தியாவை உருவாக்க முடியும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.

2. தீவிரவாத அச்சுறுத்தலுக்கு எதிரான சர்வதேச ஒத்துழைப்பு இன்றியமையாதது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. கரூர் கூட்டநெரிசல் சம்பவத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர்.எல்.முருகன் உறுதியளித்துள்ளார்.

4. தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் கரூர் சம்பவத்தை எதிர்கொள்வதாக துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. ஆசிய கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

மன் கி பாத்

தன்னிறைவு பெற்ற இந்தியாவை உருவாக்குவது சுதேசி பொருட்களை வாங்குவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும் என பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 126-வது முறையாக இன்று உரையாற்றிய அவர், எதிர்வரும் பண்டிகை காலங்களில் கைவினைஞர்களின் கடின உழைப்பிற்கு மதிப்பளிக்கவும், தொழில்முனைவோரின் கனவுகளை மெய்யாக்கவும், உள்ளூர் பொருட்களின் பயன்பாடு உறுதி செய்யப்பட வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

மக்கள் அதிகளவில் காதி பொருட்களை வாங்க வேண்டும் என்று வலியுறுத்திய பிரதமர், காந்தி ஜெயந்தி அன்று தாங்கள் வாங்கிய காதி பொருட்கள் குறித்த செய்திகளை Vocal for Local என்ற Hashtag உடன் சமூக வலைதளங்களில் பகிருமாறு கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த தனியார் நிறுவனம் புல், வாழைநார் உள்ளிட்ட பொருட்களை கொண்டு யோகப்பயிற்சிக்கு பயன்படுத்தும் தரைவிரிப்புகளை தயாரித்து வருவதை குறிப்பிட்ட பிரதமர் இதன்மூலம் 200-க்கும் மேற்பட்ட குடும்பத்தினருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்து வருவதாக எடுத்துரைத்தார்.

வணிகம், விளையாட்டு கல்வி, அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மகளிர் சக்தி முத்திரை பதித்து வருவதாக பெருமிதம் தெரிவித்த பிரதமர், Navika Sagar Parikrama எனும் மகளிர் மாலுமிகள் கடற்பயண நிகழ்வின் போது தொடர்ந்து 8 மாதங்கள் இந்திய கடற்படை பெண் அதிகாரிகள் கடற்பயணம் மேற்கொண்டதை சுட்டிக்காட்டினார்.

**கொல்கத்தாவில் கொண்டாடப்படும் துர்காபூஜை** யுனெஸ்கோ கலாச்சார பட்டியலில் இடம்பிடித்தது பெருமை அளிப்பதாக குறிப்பிட்ட பிரதமர், இதேபோல் **சத் மஹா பர்வத பூஜை**யை யுனெஸ்கோ கலாச்சார பாரம்பரிய பட்டியலில் சேர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

சுதந்திர போராட்ட வீரர் பகத்சிங் மற்றும் பாடகி லதா மங்கேஸ்கரின் பிறந்தநாள் இன்று கொண்டாட படுவதை சுட்டிக்காட்டிய பிரதமர், சுதந்திர போராட்ட தியாகிகள் நாட்டின் இளைஞர்களுக்கு உத்வேகமாக திகழ்வதாக கூறினார்.

லதா மங்கேஸ்கரின் பாடல்கள் தேசபக்தியை ஊக்குவிப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள் வரும் 2-ம் தேதி கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டிய பிரதமர், மகாத்மாகாந்தி சுதேசி கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்ததாகவும், அவற்றில் காதி பொருட்கள் தனித்துவம் வாய்ந்தவை என்றும் கூறினார்.

**வரும் விஜயதசமி தினம் ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங்கம்** நிறுவப்பட்டதன் 100 ஆண்டுகளை குறிப்பதாக கூறிய பிரதமர், இந்த இயக்கம் இயற்கை பேரழிவு உள்ளிட்ட இடர்பாடுகளின் போது தன்னார்வலர்களை கொண்டு தேச சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதாக பாராட்டு தெரிவித்தார்.

ராமபிரானின் அவதாரம் குறித்த தகவல்களை மக்களுக்கு அறிமுகப்படுத்திய **மகரிஷி வால்மிகி ஜெயந்தி** வரும் 7-ம் தேதி கொண்டாடப்படுவதாக கூறிய பிரதமர், நல்லிணக்கம், சேவை, இரக்க மனப்பான்மை ஆகியவற்றை வலியுறுத்திய ராமபிரானுக்கு அயோத்தியில் கோவில் கட்டப்பட்ட போது வால்மிகிக்கான கோவிலும் அங்கு நிறுவப்பட்டதாக எடுத்துரைத்தார்.

எதிர்வரும் தீபாவளியை ஒட்டி பிரதமர், நாட்டுமக்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

.. **மியூசிக்** ..

சேவை நல்லாட்சி என்ற தாரக மந்திரத்துடன், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு அயராது செயலாற்றி வரும் நிலையில், பிரதமரின் ஜன்தன் வங்கி கணக்கு மூலம் ஆளுமை குறித்து இன்றைய செய்தித்தொகுப்பு இடம்பெறுகிறது.

.. **மியூசிக்** ..

2014-ம் ஆண்டு பிரதமராக பதவியேற்ற பின்னர் ஜன்தன் வங்கி கணக்கு மூலம் அனைவருக்கும் ஆளுமை வழங்குவதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தினார்.

.. **பிரதமர் வாய்ஸ்** ..

இந்த திட்டத்தின் கீழ் தற்போது 56 கோடி வங்கி கணக்குகள் தொடங்கப்பட்டு உலக அளவில் நிதி உள்ளடக்கத்தின் இன்றியமையா பங்கை நம்மாடு வகுத்து வருகிறது.

இவற்றில் 67 சதவிகித வங்கி கணக்குகள், கிராம மற்றும் ஊரக நகர்ப்புற பகுதிகளை சேர்ந்தவை.

அதில் 56 சதவிகிதம் மகளிரின் வங்கி கணக்குகள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜன்தன் வங்கி கணக்குகள் மூலம் 3 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளது மிகப்பெரிய சாதனையாகும்.

பண பரிமாற்றங்கள் நேரடியாக வங்கி கணக்குகளில் செலுத்தப்படுவதாக பாரத ஸ்டேட் வங்கியின் திருச்சி மண்டல மேலாளர் திரு.எல்.வேலப்பன் தெரிவிக்கிறார்.

.. பயனாளி வாய்ஸ் ..

பிரதமரின் ஜன்தன் வங்கி கணக்கு வளர்ச்சி திட்டப்பயன்கள் அனைவரையும் சென்றடைவதை உறுதிசெய்வதோடு, நாட்டு மக்களின் ஆளுமையையும் முன்னெடுத்துச் செல்கிறது என்பது மிகையாகாது.

.. மியூசிக் ..

❖❖❖❖❖❖❖

**ஜெய்சங்கர்**

**தீவிரவாத அச்சுறுத்தலுக்கு எதிரான சர்வதேச** ஒத்துழைப்பு இன்றியமையாதது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பொதுச்சபையின் 80-வது அமர்வில் உரையாற்றியஅவர், இந்தியாவின் அண்டைநாடு தீவிரவாதத்தின் மையமாக இருப்பதாக குறிப்பிட்டார்.

ஐ.நா வெளியிட்டுள்ள தீவிரவாதிகள் பட்டியலில் அந்நாட்டு குடிமக்கள் அதிகளவில் உள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், குடிமக்களை பாதுகாக்கும் உரிமையை இந்தியா பயன்படுத்தியதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

**சரக்கு சேவை வரி**

சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் நாட்டின் மறைமுக வரி கட்டமைப்பை எளிதாக்கியுள்ளது.

புதிய வரி கட்டமைப்பின் கீழ் இரண்டடுக்கு வரி முறை மட்டுமே நடைமுறைபடுத்தப்பட்டுள்ள நிலையில், மின் சாதன பொருட்கள் மற்றும் வாகனங்களுக்கான சரக்கு சேவை வரி குறைப்பு பொதுமக்களுக்கு பெருமளவில் நலம் பயப்பதாக வேலூர், சிவகங்கை மாவட்டங்களை சேர்ந்த பயனாளிகள் எமது செய்திபிரிவிடம் தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**கரூர் கூட்டநெரிசல்**

கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்ச ரூபாய் வழங்கப்படும் என பிரதமர் திரு. நரேந்திரமோடி அறிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று மத்திய அரசு, தமிழக அரசுக்கு உறுதி அளித்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர்.எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் ஆறுதல் கூறிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 345 மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருவதாக கூறினார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே. பழனிச்சாமி அரசு முறையான பாதுகாப்பு வழங்க தவறிவிட்டதாக குற்றம் சாட்டினார்.

இச்சம்பவம் குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையே தமிழக அரசின் நிகழ்ச்சிகள் இன்றும் நாளையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையிலான குழு இன்று பிற்பகல் கரூர் அரசு மருத்துவமனையில் இச்சம்பவம் தொடர்பான விசாரணையை தொடங்குகிறது.

மேலும் இது குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு தமிழக அரசை, மத்திய அரசு கோரியுள்ளது.

இந்நிலையில் மாவட்டத்தில் அனைத்து வணிக நிறுவனங்களும் தங்களது கடைகளை அடைத்து உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

**TNPSC**

**தமிழ்நாடு அரசு துறைகளில் காலியாக உள்ள** உதவி ஆய்வாளர் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், வனவர் உள்ளிட்ட 645 பணியிடங்களுக்கான **Group-2, 2A** எழுத்து தேர்வு இன்று நடைபெற்றது.

சென்னை பிரசிடென்ஸி ஷெர்வுட் ஹால் சீனியர் செகன்டரி பள்ளி மையத்தில் **TNPSC** தலைவர் திரு.எஸ்.கே.பிரபாகரன் நேரில் ஆய்வுசெய்தார்.

❖❖❖❖❖❖❖

இருவரி

**பிரதமரின் மீன்வள மேம்பாட்டு திட்டத்தின்கீழ்** ஈரோடு மாவட்டம் பவானிசாகரில், மீன் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் சேல்கெண்டை, கல்பாசி உள்ளிட்ட ஒருலட்சம் மீன்குஞ்சுகள் பவானி ஆற்றில் விடப்பட்டுள்ளன.

**நாமக்கல் மாவட்டத்தில் யோகபயிற்சி செய்யும்** போது பயன்படுத்தப்படும் தரைவிரிப்புகள் இயற்கை பொருட்களான வாழைநார், தர்பை புல், சணல் உள்ளிட்டவற்றை கொண்டு தயாரிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**சிவகங்கை மாவட்டத்தில் இளம்** சாதனையாளர்களுக்கான பிரதமரின் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் 9 மற்றும் 11-ம் வகுப்பு மாணாக்கர் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து பயன்பெறலாம் என ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி கூறியுள்ளார்.

**சேலம் ரயில் நிலையத்தில் உரிய ஆவணங்கள்** இன்றி கொண்டுசெல்லப்பட்ட ஒருகோடி ரூபாய் மதிப்பிலான வெள்ளி பொருட்களை ரயில்வே பாதுகாப்பு படையினர் பறிமுதல் செய்து வணிகவரி துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

**ஆசிய கோப்பை 20-20 கிரிக்கெட்** போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெறும் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

ஆசியகோப்பை வரலாற்றில் கடந்த 41 ஆண்டுகளில் இரு அணிகளும் இறுதி ஆட்டத்தில் முதல்முறையாக விளையாடவுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

❖❖❖❖❖❖❖